# பாடம் 62: வாழ்நாள் சீடர்கள்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பாடங்களில், அறநெறி வாழ்வு வாழ்வதற்கான நமது கடமை, மற்றும் வேறுபட்டச் சூழமைவுகளில் உள்ள மக்களுக்கு வேறுபட்ட விதங்களில் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு சான்று பகர்வது பற்றி நாம் அறிந்து கொண்டோம். நமது கத்தோலிக்க வாழ்வை விசுவாசமாக வாழுகின்ற இந்த அலுவல் தொடர்கின்ற ஒன்று, மேலும் நாம் அதில் நமது மண்ணக வாழ்வின் காலம் முழுவதும் நிலைத்திருக்க வேண்டும். இந்த அழைப்பு நாம் பல ஆண்டுகள் தற்காலிகச் சீடர்களாக மட்டும் இருப்பதற்கானது அன்று, இயேசு கிறிஸ்துவின் வாழ்நாள் சீடர்களாக இருப்பதற்கானது. இந்த பாடத்தில், நமது வாழ்வை கிறிஸ்துவின் சீடர்களாகப் பண்படுத்த நாம் கருத்தில் கொள்ள வேண்டிய சில முக்கிய அம்சங்கள் பற்றி பார்ப்போம்.

**தற்போதைய பாடம்:**

1. கிறிஸ்துவின் சீடர்கள் என்ற முறையில், அவருக்கு முற்றிலும் அர்ப்பணித்தவர்களாகவும் எல்லா விதங்களிலும் அவரைப் பின்பற்றுகிறவர்களாகவும் இருக்க நாம் அழைக்கப்படுகிறோம். நாம் ‘‘சீடர்கள்’’ என்று அழைக்கப்படுகிறோம். இந்த உருவாக்கச் செயல்மையில், நாம் மேலும் மேலும் கிறிஸ்துவைப் போன்று மாறுவது ‘‘சீடத்துவம்’’ என்று அழைக்கப்படுகிறது.

**சீடராக இருத்தல் என்பது பயிலுநராக இருத்தலாகும்**

2. *மறைக்கற்பித்தலுக்கான பொது கையேடு* (1997) சீடத்துவத்தின் இயல்பை அதன் பொருளைப் பயன்படுத்தி தெளிவுபடுத்துகிறது: *பயிற்சிநிலை.* சீடத்துவச் செயல்மை என்பது முறையான வகுப்பறை பாடத்தை விடவும் மிக மேலானது என்பதை ‘‘பயிற்சிநிலை’’ என்ற பதம் குறிக்கிறது.

3. சீடர் என்பவர் தமது தலைவரை பின்பற்றும் ஒரு பயிலுநராக இருக்கிறார். அவர் தம் தலைவரின் படிப்பினைகள் மற்றும் வாழ்க்கைமுறையின்படி வாழ்கிறார். அவர தம் தலைவர் ஏற்படுத்திய தரநிலைகள் மற்றும் இலக்குகளைத் தழுவி அவற்றில் பங்குபெற முயற்சிக்கிறார். அவர் தம் தலைவரைப் பின்பற்றுவதன் வழியாக தம் தலைவர் விதைத்தப் புண்ணியங்கள் மற்றும் நன்மைத்தனத்தில் வளர்ச்சியுற்ற ஒரு நபராக ஆகிறார்.

4. பயிற்சிநிலை என்ற கருத்துரு மறைநூலுக்குப் புறம்பானது அன்று. பழைய ஏற்பாட்டில் அத்தகைய பயிற்சிநிலைக்கான ஓர் எடுத்துக்காட்டை நாம் எடுத்துக்கொள்வோம். மோசே மற்றும் அவரிடம் பயின்ற இளம் யோசுவாவுக்கு இடையிலான உறவுநிலையை நாம் எடுத்துக் கொள்வோம், அவர்தான் இஸ்ரயேல் மக்களை ஒருநாள் வாக்களிக்கப்பட்ட நாட்டுக்குள் நடத்திச் செல்ல இருந்தார்.

மோசே ஒரு பயலுநராக, அல்லது ஓர் இளம் உதவியாளராக, நூனின் மகனான யோசுவாவை கொண்டிருந்தார். அவர் மிக இளையவர், அனேகமாக தமது பதின்ம வயதில் இருந்தார். கடவுளைச் சந்திக்க மோசே ஒவ்வொரு முறை கூடாரத்திற்குள் சென்றபோதும், இந்த இளம் பயிலுநர் (யோசுவா) அவரைப் பின்தொடர்ந்து சென்று, மோசே கடவுளோடு நிகழ்த்திய நீண்ட கலந்துரையாடல்களில் அவரோடு அமர்ந்திருப்பார் (விப 33:11). மோசே எப்படி கடவுளோடு பேசினார் மற்றும் தோழமை கொண்டிருந்தார் என்பதை அவர் அமர்ந்து கவனிப்பார். கடவுளும் மோசேயும் 4 மில்லியன் மக்களைக் கொண்ட இஸ்ரயேல் சமூகம் குறித்த விடயங்களை விவாதிக்கிறதை அவர் செவிமடுப்பார். கடவுள் மோசேயுடன் பேசி முடித்ததும், மோசே வெளியேறி விடுவார், மோசேயுடன் வெளியேறாமல் யோசுவா கூடாரத்திலேயே தங்கியிருப்பார். கடவுளே அவரைத் தங்கியிருக்கும்படி கேட்டார், அதனால் போதிய நேரத்தை இந்த பதின்ம வயதினருடன் செலவிடலாம். இந்த பயிற்சி முழுவதும் அவசியமானது, ஏனெனில் பல ஆண்டுகள் கழித்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் இஸ்ரயேல் மக்களை நடத்திச் செல்லும் மிக முக்கி அலுவலுக்காக அவர் குறிக்கப்பட்டிருந்தார். அவர் எதிர்காலத்தில் செய்யவிருந்த பலவும் அவர் மோசேயோடு கொண்டிருந்த உறவுநிலையைச் சார்ந்திருந்தது. அவர்களின் முடிவுகள் பின்னிப்பிணைந்திருந்தன.

5. நற்செய்திகளில், இயேசு தாமே தமது சீடர்களுக்கு எப்படி பயிற்சி அளித்தார் என்று நாம் காண்கிறோம்: அவர் அவர்களை இறையியல் பட்டம் பெறுவதற்காகப் பயிற்றகத்தில் சேர்த்து விடவில்லை. யோவான் 1ல், அவர்கள் அவரிடம் வந்து, “ஐயா, நீர் எங்கு தங்கியிருக்கிறீர்?” என்று வினவியபோது, “வந்து பாருங்கள்” என்று அவர் பதிலளித்தார். பின்னர் அவர்கள் அவரைப் பின்தொடர்ந்தார்கள், அவரோடு வாழ்ந்தார்கள், அவரோடு உணவு உண்டார்கள், அவரோடு உறங்கினார்கள், அவரது வாழ்வைக் கண்டார்கள், மேலும் அவர் பேசிய ஒவ்வொரு வார்த்தையையும் கேட்டார்கள். இயேசு தமது மண்ணகத் திருப்பணி காலத்தில் செய்த எல்லாவற்றையும் பார்த்து, பின்பற்றுவதே அவர்களுக்கு வழங்கப்பட்ட அலுவலாக இருந்தது. அவர்களது இணைந்த வாழ்வின் நடுவே, எல்லா மனிதருக்கும் கடவுளின் திட்டத்தின் நிறைவு வெளிப்படுத்தப்படாததால், அப்போது வெளியிலுள்ள மக்கள் புரிந்துகொள்ளாத விடயங்களை, கடவுளின் அரசு குறித்த பல “ரகசியங்களை” சீடர்களுக்கு இயேசு கற்பித்தார்.

6. சீடத்துவம், மறைநூலில் நாம் காண்கிறது போன்று, வாழ்வு மற்றும் பொது வெளியைப் பகிர்தலாக இருக்கிறது: தலைவருடன் சேர்ந்து வாழ்தல், பார்த்தல் மற்றும் பின்பற்றுதல். அது தலைவரோடு எந்த வேலையும் இருக்கிறதாகத் தெரியாதபோதும் அவரோடு தங்கியிருத்தல். இது மிக, மிகப் பழமையான ஒரு கலை.

7. இயேசு மக்கள் கூட்டத்தின் மீது அன்பும் பரிவும் கொண்டிருந்தது உண்மை, அவர் கடவுளின் அரசை அவர்களுக்கு போதித்தார். ஆனால் நீங்கள் பாருங்கள், வாய்ப்புக்கேடாக, சீடத்துவம் என்பது எல்லா மக்களுக்கும் உரிய ஒன்றாக இல்லை. எல்லாரும் கிறிஸ்துவிடம் வர அழைக்கப்படுகின்றனர், ஆனால் சிலர் மட்டுமே சீடர்களாக இருக்கத் “தேர்ந்தெடுக்கப்

பெற்றனர்'' (மத் 22:14), ஏனெனில் பெரும்பாலானோர் சீடத்துவத்தின் விலையைத் தாங்க விரும்புவதில்லை.

ஒரு சீடர் தமது சொந்த குடும்பத்தை விட அதிகமாக இயேசுவை அன்பு செய்ய வேண்டும் (*லூக்கா 14:26*: ''தம் தந்தை மற்றும் தாயை, மனைவி மற்றும் குழந்தைகளை, சகோதரர்கள் மற்றும் சகோதரிகளை, மேலும் தமது சொந்த உயிரையும் வெறுக்காமல் என்னிடம் எவரும் வந்தால், அவர் எனது சீடராக இருக்க முடியாது'').

ஒரு சீடர் தம்மை மறுக்க வேண்டும், விருப்பக் கீழ்ப்படிதலில் கிறிஸ்துவுக்கு முழுமையாக அர்ப்பணித்து, இறப்பு வரையிலும் முழு அர்ப்பணத்துடன் வாழ வேண்டும் (*லூக்கா 14:27*: ''தமது சொந்த சிலுவையைச் சுமக்காமல் என் பின்னே வருகிற எவரும் எனது சீடராக இருக்க முடியாது'').

ஒரு சீடர் அனைத்தையும் இயேசுவிடம் ஒப்படைக்க விருப்பமுள்ளவராக இருக்க வேண்டும் (*லூக்கா 14:33*: ''உங்களில் தமது எல்லா உடைமைகளையும் விட்டுவிடாத எவரும் எனது சீடராக இருக்க முடியாது'').

ஒரு சீடர் இயேசுவின் வார்த்தைகள் மற்றும் படிப்பினைகளில் உண்மையாக நிலைத்திருக்க வேண்டும் (*யோவான் 8:31*: ''நீங்கள் என் வார்த்தையில் நிலைத்திருந்தால், நீங்கள் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள், நீங்கள் உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள், மேலும் உண்மை உங்களை விடுதலையாக்கும்…'').

இயேசு தம்மை அன்பு செய்கிறதைப் போன்று ஒரு சீடர் மற்றவர்களை அன்பு செய்கிறார் (*யோவான் 13:34-35*: ''நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளையைக் கொடுக்கிறேன்: ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல, நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருந்தால், நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்'').

### சீடராக இருத்தல் என்பது ஒன்றிப்பில் வாழ்தலாகும்

8. கதிம 1816 கூறுகிறது, ''கிறிஸ்துவின் சீடர் விசுவாசம் கொண்டிருப்பது மட்டுமின்றி அதை வாழவும், அதை அறிக்கையிடவும், உறுதியாக அதற்குச் சான்று பகரவும், அதைப் பரப்பவும் வேண்டும்''. இந்த நெறிமுறை சீடத்துவச் செயல்மையின் வெளிப்படையான இரண்டு பகுதிகளோடு வருகிறது, அதாவது, முதலாவது, விசுவாசம் கொண்டு அதை வாழக் கற்றல், இரண்டாவது, மற்றவர்களை விசுவாசத்திற்குள் மற்றவர்களைப் பயிற்றுவிக்கக் கற்றல். இவை நமது வாழ்வின் வழியால் உருபெறும் நமது விசுவாசத்தின் அம்சங்களாக இருக்கின்றன. நாம்

நமது வாழ்வை விசுவாசத்தை வெளிப்படுத்தி அதற்குள் மற்றவர்களை இழுக்கின்ற விதத்தில் வாழ்கிறோம்; இது நற்செய்தி பரப்பல் என்று அழைக்கப்படுகிறது.

9. நெடுங்காலமாக, நமது விசுவாசம் எவ்வளவு உண்மையானது மற்றும் நல்லது என்பதை எழுச்சியூட்டும் மற்றும் கட்டாய வார்த்தைகளால் எடுத்துரைத்து பரப்புவதே நற்செய்தி பரப்பல் என்பது போன்று, மேற்கத்திய கிறிஸ்தவர்கள் நற்செய்தி பரப்பலை ஒரு வார்த்தை சார்ந்த செயல்பாடாகவே வரையறுத்துள்ளனர். நமது விசுவாசத்தைப் பரப்ப வார்த்தைகளைப் பயன்படுத்துவது அதற்குரிய இடத்தைக் கொண்டுள்ள நிலையில், நமது விசுவாசத்துக்கு சான்று பகரும் அதிக முழுமையான வழிக்கு சீடத்துவம் நம்மை அழைக்கிறது. இது நமது விசுவாசத்தை ஓர் ஒத்திசைவோடு, அழகியதான, நல்லதான, உண்மையான விதத்தில் செயலாக்கும் நமது வழியாக இருக்கிறது, அது நாம் சந்திக்கின்ற மக்களை செயல் வடிவம் பெற்ற நமது விசுவாசத்தின் வழியில் அவர்கள் காண்கின்ற வாழ்வின் நடனத்திற்குள் தாங்கள் இழுக்கப்படுவதைக் கண்டடையச் செய்கிறது. நற்செய்தி பரப்பல் என்ற ‘‘வந்து பாருங்கள்’’ என்று, நம்மோடு வந்து வாழ்ந்திட, நமது ‘‘நடனத்தில்’’ இணைய மற்றவர்களுக்கு விடுக்கும் ஓர் அழைப்பாக இருக்கிறது.’’

10. விசுவாசத்தின் ஓர் உறுதியானதும் நிலையானதுமான ஒத்திசைவு மற்றும் மொழிவை உருவாக்க ஒரு சீடருக்கு பல ஆண்டுகள் எடுக்கிறது. இதன் காரணமாகவே தொடக்கத் திருச்சபையில், புகுமுகநிலையினர், அதாவது திருமுழுக்கு, உறுதிபூசுதல் மற்றும் தொடர்ந்து மற்றக் கிறிஸ்தவ அருளடையாளங்களைப் பெற்றிட விரும்பும் நபர்களுக்கான புகுமுகச் சடங்குகள், அவர்களின் கிறிஸ்தவ வாழ்வின் வழி உறுதியானதும் நிலையானதுமாக மாறும் வரை நடைபெறவில்லை. புகுமுகச் சடங்குகள் வரை இட்டுச் செல்லும் சீடத்துவப் பயணம் இறுதியாக குறைந்தது மூன்று அல்லது அதற்கு மேலான ஆண்டுகள் எடுக்கலாம்.

11. சீடத்துவத்திற்கான அழைப்புக்கு வாழ்வில் எந்த சமரசமும் இன்றி அதற்கு முதலிடம் கொடுக்கிறதற்கான அர்ப்பணம் உறுதியாக நமக்குத் தேவைப்படுகிறது. ஒரு சீடர் தமது ஆன்மிக வாழ்வில் மேன்மை அடைகிறார்; அவர் பாவத்தைத் தவிர்க்க முயற்சிக்கிறதைத் தாண்டிச் சென்று, அதற்கும் மேலாக கடவுளின் ஆவியார் தன்னை இயக்க அனுமதிக்கிறார். அவரது அக்கறை கெட்டவராக இருக்கிறதை எப்படி தவிர்ப்பது என்பதில் அன்று, மாறாக உண்மையில் நல்லவராக எப்படி இருக்கிறது என்பதில் இருக்கிறது.

*மத்தேயு 19:16-24*: ‘‘தற்போது ஒரு மனிதர் அவரிடம் வந்து, ‘ஐயா, நித்திய வாழ்வை உடைமையாக்க நான் என்ன நன்மை செய்ய வேண்டும்?’ என்று கேட்டார். இயேசு அவரிடம், ‘எது நன்மை என்று நீர் ஏன் என்னைக் கேட்கிறீர்? நல்லவராக இருக்கிறவர் ஒருவரே. ஆனால் நீர் வாழ்வுக்குள் நுழைய விரும்பினால், கட்டளைகளைக் கடைபிடியும்’ என்றார். அவர், ‘எவற்றை’ என்றிட, ‘கொலை செய்யாதே. விபசாரம் செய்யாதே. களவு செய்யாதே. பொய்ச் சான்று சொல்லாதே. உன் தாய் தந்தையை மதித்து நட. உன்னைப் போல் உனக்கு

அடுத்துள்ளவர் மீதும் அன்பு செலுத்து, ஆகியவற்றை' என்று இயேசு பதிலளித்தார். அந்த இளைஞர் அவரிடம், 'நான் இவற்றை எல்லாம் கடைபிடித்து வந்துள்ளேன். அதிகமாக நான் செய்ய வேண்டியது என்ன?' என்றார். இயேசு, 'நீர் நிறைவுள்ளவராக விரும்பினால், சென்று உமது உடைமைகளை விற்று, அந்த பணத்தை ஏழைகளுக்குக் கொடும், நீர் விண்ணகத்தில் செல்வம் கொண்டிருப்பீர்; பின்பு வந்து, என்னைப் பின்பற்றும்' என்றார். இந்த வார்த்தைகளைக் கேட்ட அந்த இளைஞர் வருத்தத்தோடு சென்று விட்டார், ஏனெனில் அவரிடம் மிகுதியான சொத்து இருந்தது. பிறகு இயேசு தம் சீடர்களிடம், 'உண்மையில் நான் உங்களுக்குச் சொல்கிறேன், செல்வரான ஒருவர் விண்ணரசில் நுழைவது கடினம். ஆம், நான் மீண்டும் உங்களுக்குச் செல்கிறேன், செல்வரான ஒருவர் விண்ணரசில் நுழைவதை விட ஊசியின் காது வழியாக ஒட்டகம் கடந்து செல்வது எளிது' என்றார்.''

இந்நாள்களில் கிறிஸ்தவர்கள் நடுவே பரவலாக உள்ள ''நீங்கள் நிறைவானவராக இருக்கத் தேவையில்லை, நீங்கள் இருக்கிறபடியே கடவுள் அன்பு செய்கிறார்'' என்ற சொல்வழக்கு, தவறான வழிகாட்டுதலைக் கொண்ட இது நற்செய்தியின் உணர்வுக்கு முரணாக இருக்கிறது. கடவுள் உண்மையில் நாம் நிறைவானவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். போதுமானதை விட நாம் குறைந்த நிலையில் இருக்கிறதை அவர் விரும்பவில்லை, ஏனெனில் நித்திய வாழ்வு என்பது கடவுளின் எல்லையற்ற நன்மைத்தனம், அளவற்ற அன்பு, மற்றும் வற்றாத நிறைவின் ஒன்றிப்புக்குள் நுழைவதாகும்.
இந்த செல்வந்த இளைஞர் அடிப்படையில் ஒரு நல்ல மனிதராக இருந்தார், கடவுளை நம்பும் ஒரு நல்ல யூதராக வளர்க்கப்பட்ட அவர், பத்துக் கட்டளைகளைக் கடைபிடித்து பாவத்தைத் தவிர்க்க மிகுந்த முயற்சி எடுத்தார். வெறுமனே குற்றத்தைத் தவிர்ப்பதற்கு மேலாக இருக்க விரும்புமாறு இயேசு அவரைத் தூண்ட முயற்சித்தார். வாய்ப்புக்கேடாக, அவர் மண்ணக உடைமைகள் மீது வலுவானப் பற்று கொண்டிருந்ததால் சிறந்த வாழ்வுக்கான விலையைக் கொடுக்க அவரால் இயலவில்லை.

12. தெளிவாக, சீடர்களின் குழுமத்தில் செயல்நிலை பங்கேற்பாளராக இல்லாமல் சீடத்துவச் செயல்மைக்குள் ஒருவர் தனியாகச் செல்ல முடியாது. அதே அக்கறை மற்றும் ஈடுபாடுகளைப் பகிரும் மற்றவர்களுடன் ஒன்றிக்கின்ற ஒரு தோழமைக்குள் நுழையும் பொழுது மட்டுமே ஒருவர் சீடருக்குரிய வாழ்வில் வெற்றிபெறுகிறார். விசுவாசிகளின் குழுமமே நமது கிறிஸ்தவ வாழ்வை நாம் வாழும் விதத்தை உருவாக்கி, நமது விசுவாச வெளிப்பாடுகளுக்கு வடிவம் கொடுக்கிறது.

13. இங்கு சுட்டப்படும் ''ஒன்றிப்பு'' என்பது நமது திருமுழுக்கு மற்றும் உறுதிபூசுதலின் உண்மையில் இருந்து வருகிறது, நாம் ''கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டுள்ளோம்... கிறிஸ்தவர் கிறிஸ்துவுக்கு உரியவராக இருக்கிறதை ஓர் அழியாத ஆன்மிகக் குறியீட்டால் (இயல்பினால்) திருமுழுக்கு முத்திரையிடுகிறது'' (கதிம 1272). நாம் ஒவ்வொருவரும் இயேசுவோடு பிணைக்கப்பட்டு, அவரது உடலின் ஓர் உறுப்பாக இருக்கிறோம்.

ஆனால் திருவிருந்தில் திருநிலைப்படுத்திய அப்பத்திலும் திராட்சை ரசத்திலும் நாம் எதைப் பெறுகிறோம்? ஹிப்போ புனித அகுஸ்தீன் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவன்று புதிதாகத் திருமுழுக்கு பெற்றவர்களுக்கான தமது போதனையில் (*மறையுரை* 227), தங்களுக்காக நொறுக்கப்பட்ட உடலையும் சிந்தப்பட்டக் குருதியையும் பக்தியுடன் பெறுகிறவர்கள் அந்த உடலாகவே தாங்களும் மாறுவர். இதன் பொருள், நற்கருணையின் மக்களாக, நாம் தற்போது கிறிஸ்துவின் மறையுடலின் நெருங்கிய ஒன்றிப்பில் சேர்ந்து, தலையாகிய அவரோடு பிரிக்க இயலாதபடி இணைந்துள்ளோம். அதனோடு கூடுதலாக, நாம் ஒருவர் மற்றவரோடு பிரிக்க இயலாதபடி இணைந்துள்ளோம் என்றும் பொருளாகிறது.

14. இதன் காரணமாகவே, கிறிஸ்தவ விசுவாசத்தின் முற்கால வடிவம், இன்று நம்பகமாகப் பாதுகாக்கப்பட்டிருந்தால், தனிநபர் மீதன்றி திருச்சபை மற்றும் கிறிஸ்துவுடனான அதன் ஒன்றிப்பு மீதும் கவனம் செலுத்தும். ஒரு கிறிஸ்தவர் ஒரு தனிப்பட்ட உணர்வில் தமது விசுவாசத்தின் மீது கவனம் செலுத்துவதும், மற்ற அனைத்திற்கும் மேலாக விசுவாசத்தில் தமது தனிப்பட்ட முன்னுரிமைகளை உயர்த்துவதும் இயேசு கிறிஸ்துவின் சீடராக இருப்பதன் உள்ளார்ந்தப் பொருளை இழக்கச் செய்கிறது. தனிப்பட்ட விசுவாசத்தின் மீதான வழக்கால் தனிப்பட்ட விசுவாசம் இருக்கக்கூடாது என பொருளன்று. நாம் கிறிஸ்துவைப் பின்பற்றினால், அவருடனான நமது உறவுநிலை ''தனிப்பட்டதாக'' இருக்கின்ற ஒரு நிலை இருக்க வேண்டும். அதே நேரம், இந்த தனிப்பட்ட விசுவாசம் மற்ற ''தனிப்பட்ட'' உறவுநிலைகளின் பெரும் ஒன்றிப்பின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும், எல்லாம் பிரிக்க இயலாதபடி தொடர்பிலுள்ளன.

இந்த காரணத்தாலும், கிறிஸ்து மற்றும் அவரது திருச்சபையுடன் நாம் பகிர்கின்ற ஒன்றிப்பு, திருச்சபைக்கு வெளியே உள்ளதாகக் கூறுகின்ற ''தனித்துவிடப்பட்ட'' கிறிஸ்தவர்களாக நாம் இருக்க அனுமதிக்காது. உண்மையில், கிறிஸ்துவின் உடலுடனான நமது உறவுநிலை மிக நுணுக்கமானது, திருச்சபையின் உறுப்பினர்கள் எல்லாரும் கிறிஸ்துவோடு இணைந்து ''முழு கிறிஸ்து'' (லத்தீனில், *கிறிஸ்துஸ் டோட்டுஸ்*)-ஆக இருக்கிறார்கள் என்று ஹிப்போ புனித அகுஸ்தீன் வரையறுக்கிறார். இந்த முழு கிறிஸ்துவின் உறுப்பினர்களாக நாம் வாழ்ந்தால், நமது சீடத்துவம் கிறிஸ்து மற்றும் அவரது திருச்சபையின் சூழமைவில் நடைபெற்று, அதன் செயல்வடிவத்தைக் கண்டடைகிறது. வேறு எந்த வழியும் இல்லை.

15. கிறிஸ்து மற்றும் அவரது திருச்சபையுடனான நமது ஒன்றிப்பின் இயல்பில் எல்லாரும் பங்கு கொண்டுள்ளதன் ஒளியில், தனித்தியங்கல் என்பது மிகச் சாத்தியமான அச்சுறுத்தலாக, கிறிஸ்தவர்கள் நடுவே இன்று பரவியுள்ள எல்லா பிரச்சனைகளுக்கும் காரணமாக இருக்கிறது. சீடர்களாக நமது வாழ்வு மிக வெளிப்படுத்தக்கூடிய, தாக்கம் ஏற்படுத்துவதாக இருக்கலாம், ஆனால் பரந்த பார்வையாளர்களின் ஆய்வுக்கு உட்பட்டதன்று, ஏனெனில் நமது கிறிஸ்தவ வாழ்வை எப்படி நடத்த வேண்டும் என்று முடிவெடுப்பது ''அவர்கள் வேலையில்லை''. நாம் ஒன்றிப்பின் ஆன்மிகத்துக்குத் திரும்புவது தேவையாகிறது.

16. நசியான்சுஸ் புனித கிரகோரி விவரிக்கிற *பெரிக்கொரிசிஸ்* (''ஊடிடை அகத்தங்கல்'') போன்று, கடவுள், தூய திரித்துவம் தாமே மூன்று நபர்களின் நிறைவான ஒன்றிப்பு என்று நாம் நம்பினால், கிறிஸ்தவத் தனிநபர்கள் என்ற முறையில் நாம் இந்த *பெரிக்கொரிசிஸ்*-க்குள் நுழைய அழைக்கப்படுகிறோம். அது வரை, சீடத்துவம் என்பது தான் நுழைந்து கொண்டுள்ள இன்னும் நிலையாக நுழைகின்ற இந்த ஒன்றிப்பைக் காணச் செய்கின்ற வரை தனிநபரால் உறுதியான வெளிப்பாடாகச் செயல்வடிவம் பெறுகிறது.

தூய திரித்துவத்தின் இந்த ஒன்றிப்பில், இயேசு கிறிஸ்துவாக உடலேற்ற நித்திய வாக்கும், ஒரே கடவுளாகிய மூன்று நபர்களின் மொத்த விருப்பத்துக் கீழ்ப்படிந்து தமது தனிப்பட்ட முன்னுரிமைகள் மற்றும் மகிழ்ச்சிகளில் இருந்து தம்மை விலக்கிக் கொண்டார். அவர், ''என் தந்தையே, சாத்தியமானால், இந்த கிண்ணம் என்னை விட்டு அகலட்டும். ஆனாலும், என்னுடையது அன்று, உமது விருப்பப்படியே ஆகட்டும்'' (மத் 26:39) என்கிறார். மேலதிகமாக, அவர், ''எனது சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அன்று, என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத்தில் இருந்து வந்துள்ளேன்'' (யோவா 6:38) என்று கூறுகிறார்.

அவ்வாறே, அதே இயேசு கிறிஸ்துவின் நாட்டமுள்ள சீடர்களாக, வாழ்வில் நமது ஆன்மிகத் திசை நமது விசுவாசம், எதிர்நோக்குகள் மற்றும் நாட்டங்களைப் பகிர்கின்ற மற்றவர்களின் திசையோடு மிகவும் பின்னிப்பிணைந்ததாக இருக்க வேண்டும். ஒன்றிப்பைச் செயலாக்காத ஓர் ஆன்மிகம் ஈர்க்கின்ற ஆற்றல் கொண்டிராது, ஏனெனில் அது இறை வாழ்வைச் சுட்டவில்லை. இவ்வாறுதான், கிறிஸ்தவ வாழ்வின் ஆன்மிகம் இருக்க வேண்டுமென்று கடவுள் எப்பொழுதும் வடிவமைத்துள்ளார், இதனால்தான் இயேசு இந்த கட்டளையைத் தம் சீடர்களுக்கு வழங்கினார்: ''நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளையைக் கொடுக்கிறேன்: ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல, நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருந்தால், நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்'' (யோவா 13:34,35). இதன் காரணமாகவே, ''அன்பு செலுத்தவும் நற்செயல்கள் புரியவும் ஒருவர் மற்றவரைத் தூண்டியெழுப்புவதில் நாம் கருத்தாய் இருக்க வேண்டும். சிலரது வழக்கமாக இருக்கிறது போன்று, நமது சபையில் இருந்து நாம் விலகியிருக்கக் கூடாது, ஆனால் ஒருவர் மற்றவருக்கு ஊக்கமூட்டுவோம், நாள் நெருங்கி வருகிறதை நீங்கள் காண்கிறதால் இதை இன்னும் அதிகமாகச் செய்வோம்'' (எபி 10:24-25). ஆகவே ஒரு சீடர், கிறிஸ்து மற்றும் ஒருவர் மற்றவருடனான பொது ஒன்றிப்பின் பேற்றினால் மற்ற சகோதர சகோதரிகளோடு இருக்கிறத் தோழமையை காணத்தக்கதாக ஆக்குவதை நிலையாக விரும்புகிறார்.

## சீடராக இருத்தல் என்பது இயேசுவைப் போன்று மாறுவதாகும்

17. கிறிஸ்தவ ஆன்மிகம் என்பது திருமுழுக்கு மற்றும் உறுதிபூசுதல் அருளடையாளங்களால் நாம் இணைக்கப்பட்டுள்ள கிறிஸ்துவைப் பின்பற்றுவதை உள்ளடக்கியுள்ள காரணத்தால், அவர்களின் ஆன்மிகங்கள் வேறுபட்டிருந்தாலும் துறவற வாழ்வுக்கு உறுதியேற்கும் எல்லார் நடுவிலும் பொதுவாகப் பகிரப்பட்ட அர்ப்பண வடிவத்தை நீங்கள் கவனிக்கலாம். அவர்கள் வேறுபட்ட விதத்தில் செயல்பட்டாலும் வாழ்ந்தாலும், கூட்டுச் சீடர்களாக மிக உறுதியான மேற்கவிவைக் கொண்டுள்ளனர். இந்த அர்ப்பணம் நற்செய்தி அறிவுரைகளைச் சுட்டுகிறது, அவை எளிமை (அல்லது தன்னார்வ ஏழ்மை), கற்பு (அல்லது மணத்துறவு), மற்றும் கீழ்ப்படிதலின் மூவிணை அர்ப்பணங்களாக இருக்கின்றன.

இந்த நற்செய்தி அறிவுரைகள் சிறப்பாக அழைக்கப்பட்ட மற்றும் அவற்றை வாழ்வதற்கான சிறப்பு இறையருள் வழங்கப்பட்ட குறிப்பிட்ட கிறிஸ்தவர்களின் குழுவுக்கானவை என்று சில நேரங்களில் கிறிஸ்தவர்களால் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. துறவற வாழ்வுக்கு அழைக்கப்பட்டு, ஏழ்மை, கற்பு, மற்றும் கீழ்ப்படிதல் உறுதியேற்பை பொதுவில் அளிக்கிறது உண்மை என்றாலும், நற்செய்தி அறிவுரைகள் என்பவை கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் எல்லாருக்குமானவை. இந்த பொது அறிக்கையிடல்களுக்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளோரின் வகிநிலையானது, அவர்கள் சார்ந்துள்ள குழுமங்கள் தூய நிலைக்கான முயற்சியாகக் கொண்டுள்ள அவர்களின் அர்ப்பணம் மற்றும் தன்னளிப்பு தியாகம் ஆகியவை நமக்குத் தூண்டுதலாக இருக்கின்றன. ஆனால் உலகுசார் வாழ்வு வாழ அழைக்கப்பட்டுள்ள நமக்கும், நற்செய்தி வாழ்வின் நிறைவை நோக்கியப் பயணத்திற்கு நற்செய்தி அறிவுரைகள் பொருந்துகின்றன.

18. இன்றைய நவீன உலகமும் வாழ்வின் சிக்கலும் சமகால மனிதருக்கு முன்னிகழாத எல்லா விதமான சவால்களையும் கொணர்கின்றன.

*கவ்தியும் எத் ஸ்பெஸ்*, 4: “இன்று, மனித இனம் வரலாற்றின் புதிய கட்டத்தில் உள்ளது. ஆழ்ந்த மற்றும் தீவிர மாற்றங்கள் உலகம் முழுவதும் பரவிக் கொண்டிருக்கின்றன. மனிதரின் மதிநுட்பம் மற்றும் படைப்பாற்றல்களால் தூண்டப்பட்டு, இந்த மாற்றங்கள் அவர் மீதும், அவரது தீர்மானங்கள் மற்றும் ஆசைகள் மீதும், தனியாகவும் கூட்டாகவும், மேலும் அவர் சிந்திக்கும் விதத்திலும், பொருட்கள் மற்றும் மக்களிடம் செயல்படும் விதத்திலும் தாக்கம் செலுத்துகின்றன.

ஒருபோதும் மனித இனம் இத்தகைய மிகுதியான செல்வம், வளங்கள் மற்றும் பொருளாதார ஆற்றலை அனுபவித்ததில்லை, இருந்தாலும் உலக குடியாளர்களில் பெரும் பகுதியினர் இன்னும் பசியாலும் ஏழ்மையாலும் துன்புறுகின்றனர், எண்ணற்றோர் முழு கல்வியறிவின்றி துன்புறுகின்றனர். முன்பு எப்போதும் மனிதர் சுதந்திரம் குறித்த இத்தகையத் தெளிவானப் புரிதலைக் கொண்டிருக்கவில்லை, இருந்தாலும் அதே நேரத்தில் சமூக மற்றும் உளவியல் அடிமைத்தனத்தின் புதிய வடிவங்கள் தோன்றியுள்ளன.”

இந்த பிரச்சனைக்கான நச்சுமுறிவாக திருச்சபையின் பழமையான ஞானம் இருக்கிறது, அது நவீன உலகின் சவால்கள் நடுவில் வாழும் சீடருக்குத் தகுந்த நற்செய்தி அறிவுரைகளைத் தொடர்ந்து பரிந்துரைக்கிறது. கிறிஸ்துவின் சீடர்களாக இருக்க நாடுகிற எல்லாருக்கும் எளிமை, கற்பு, மற்றும் கீழ்ப்படிதலின் வாழ்வுக்கு அழைப்பு விடுக்கிறது, இவர்களுக்கு இந்த அறிவுரைகள், இயேசு தமது மண்ணக வாழ்வில், தம்மால் நிறுவப்பட்ட இறை எய்துபணியில் செயல்பட்டது போன்று தெரிகின்றன.

19. புனித பிரான்சிஸ் தெ சேல்ஸ் 17ஆம் நூற்றாண்டில் *அர்ப்பண வாழ்வுக்கான அறிமுகம்* என்ற தலைப்பில் எழுதிய இலக்கியம், திருமண வாழ்வுக்குள் நுழைய இருந்த பிலோதியா என்ற இளம்பெண்ணுக்கு தூயநிலையை அடைந்திட வழிகாட்டுதல் வழங்குகிறது. திருமண வாழ்விலும், எளிமை, கற்பு மற்றும் கீழ்ப்படிதல் உள்ளிட்ட எல்லா வகை புண்ணியங்களையும் மனிதர்கள் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று புனித பிரான்சிஸ் அறிவுறுத்துகிறார்.

நவீன உலகில் உள்ள பிரச்சனைகளைக் கருத்தில் கொண்டால், நமது உலகை இன்று கொள்ளையிடும் மூன்று முக்கியத் தீமைகளாக இருக்கின்றவை பணம், பாலுறவு, மற்றும் அதிகாரம். இந்த தீமைகளுக்குப் பயனுள்ள நச்சுமுறிவாக நற்செய்தி அறிவுரைகள் தொடர்ந்து பொருந்துகின்றன: பணத்தின் மீதான பற்றுக்கு எதிர்நிலை எளிமை, பாலியல் நெறிபிறழ்வுக்கு எதிர்நிலை கற்பு, அதிகார வெறிக்கு எதிர்நிலை கீழ்ப்படிதல்.

20. **எளிமை** அல்லது ஏழ்மை என்ற நற்செய்தி அறிவுரை, பேராசை மற்றும் தற்சார்பின் இந்த உலகில், நமது வாழ்வின் முன்னுரிமை விடயத்தில் கடவுளை மட்டுமே சார்ந்திருக்கிறது பற்றி பேசுகிறது.

செல்வம் குறித்த பிரச்சனை பொருள்சார் உடைமைகளில் மட்டுமே மிக அதிகமாகக் காணப் படவில்லை, ஏனெனில் அந்த பொருட்களைப் பயன்படுத்தும் நபரின் உள்ளார்ந்த மனப்பாங்கே செயலின் நன்மை மற்றும் தீமையைத் தீர்மானிக்கிறது. மற்ற வார்த்தைகளில், ஏழ்மை என்பது இதயத்தின் நிலை, ஒரு வெளிப்புறச் சூழல் மட்டுமன்று. ஆகவே எளிமை என்பது எதுவும் கொண்டிராதது அன்று, மாறாக, எதன் மீது பற்றின்றி இருக்கிறதாகும்.

ஹிப்போ புனித அகுஸ்தீன் 4ஆம் நூற்றாண்டிலும், புனித தாமஸ் அக்குவினாஸ் 13ஆம் நூற்றாண்டிலும் பொருள்சார் விடயங்கள் தம்மிலேயே தீயவை அன்று என்று கூறியுள்ளனர். படைப்புப் பொருட்கள் தாமே கடவுளிடம் இருந்து நம்மைப் பிரிக்கிறதில்லை; மாறாக, அவை உண்மையில் நம்மை அவரிடம் நடத்திச் செல்லும் திறன் கொண்டுள்ளன. எப்பொழுதாவது பொருள்சார் விடயங்கள் கடவுளிடம் இருந்து நம்மைப் பிரித்தால், அதைத் தவறாகப் பயன்படுத்தியதே அதற்கு காரணமாக இருக்கும்.

கடவுள் சில மனிதர்களை அவர்களது வாழ்நாளுக்குத் தேவையானதை விட மிக அதிமான செல்வத்தால் ஆசி வழங்குகிறார். ஆனால் செல்வம் படைத்தோர் தங்கள் வாழ்வில் பொருள் இன்றித் துன்புறும் மற்றவர்களின் பணியாளர்களாகச் செயல்படப் பழகுமாறு நற்செய்தியின்

அறிவுரை வலியுறுத்துகிறது. தமது உணவு மேசையில் ஏழைக்காகக் காத்திருந்த அரசர் புனித லூயிஸ், அடிக்கடி ஏழைகளைச் சந்தித்து அரசக்குடும்பப் பெண்கள் நடுவே எளிய ஆடையினை அணிந்த ஹங்கேரி அரசி புனித எலிசபெத் ஆகியோரைப் போன்று, இவ்வாறு செயல்பட்ட நாயக எடுத்துக்காட்டுகள் திருச்சபை வரலாற்றில் மிகுதியாக இருக்கின்றன.

21. பொருட்களைத் திரட்டுவதே நாம் இன்பமும் சமூக உயர்நிலையும் அடைவதற்கான வழி என்பதாக முன்னிறுத்தும் நுகர்வு கலாச்சாரத்தில் நாம் வாழ்கிறோம். பல மக்கள் எஞ்சி உலகில் இருக்கின்ற ஏழ்மையைக் கருத்தில் கொள்ளாமல் பொருட்களை வாங்கிப் பதுக்கும் வயமையில் இருக்கின்றனர். உண்மையில், சொந்தமாக மகிழுந்து வைத்திருக்கிறவர்கள் உலகின் உயர் வகுப்பினர் நடுவே இருக்கின்றனர். வீடு வைத்திக்கிறவர்கள் உலகில் உள்ள ஐந்து விழுக்காடு செல்வந்தர்கள் நடுவே இருக்கின்றனர்.

22. இந்த சூழமைவில் தேவையான அளவு மட்டும் வருவாய் பெற்றுச் செலவு செய்வது ஏழ்மையில் வாழ்வதாகிறது. ஏழைகள், மற்றும் உங்கள் குழந்தைகளின் உடல் மற்றும் உணர்ச்சி சார்ந்த உண்மையான தேவைகளில், அவர்கள் பதுக்கல்காரர்களாக மாறுவதற்கு ஊக்குவிக்காமல், அன்புடன் அக்கறை காட்டுவது ஒரு புண்ணியமாகும்.

உண்மை பொறுப்புநிலையின் ஆன்மிகத்தைப் பயிற்சி செய்கின்ற சீடர்கள் இந்த நவீன உலகில் நற்செய்திக்கு சாட்சிகளாக நிற்பர். மெய்மையில், எல்லாரும் ‘‘வைத்திருக்கிறது’’ உண்மையில் இருக்கின்ற எல்லாவற்றையும் படைத்த கடவுளுக்கு உரியது என்று அவர்கள் கண்டுணர்வர்.

உள்நோக்கத்துடன் நமது சிந்திக்கும் விதத்தையும் நமது மனப்பாங்கையும் நடைமுறைக்கு ஏற்ற விதத்தில் சீரமைத்தல், ‘‘ஏழ்மை’’யின் ஆன்மிகத்தை உருவாக்குவதன் முதல் படியாக இருக்கிறது. செல்வம் மற்றும் உடைமைகள் குறித்த நாம் சிந்திக்கின்ற விதம் மாறுகின்ற பொழுது, அது இறுதியாக நாம் பணத்தை எப்படி பயன்படுத்துவது என்பதற்கான வெளிப்புறத் தெரிவுகளில் தாக்கம் ஏற்படுத்தும்.

23. *கதிம 2337*: ‘‘**கற்பு** என்பது ஒரு நபருக்குள்ளே பாலியல்பின் வெற்றிகரான ஒருகிணைப்பை சுட்டுகிறது, இவ்வாறு மனிதரின் உடல் மற்றும் ஆவி சார்ந்த உள்ளார்ந்த இருப்பில் அவரது ஒருமை ஏற்படுகிறது.’’ வெறுமனே பாவம் நிறைந்த பாலியல் நடத்தையில் இருந்து விலகி இருக்கிறதற்கு மேலாக, ஒருவரது பாலியல்பின் கொடையை அந்த கொடையைத் தந்தவராக கடவுளைக் கண்டுணரும் விதத்தில் ஒழுங்குபடுத்துவதும் அடங்கியுள்ளது; உண்மையில் இந்த நோக்கத்திற்காகவே மனிதரில் பாலியல்பின் கூறு அமைக்கப்பட்டுள்ளது.’’

‘‘கற்பு’’ என்ற பதம் பெரிதும் ‘‘மணத்துறவு’’ அல்லது ‘‘பாலுறவில் இருந்து விலகியிருத்தலை’’ குறிக்கப் பயன்படுகிறது, ஆனால் அது அவ்வாறிருக்கத் தேவையில்லை. இந்த பதத்திற்கு அதிக பொதுவான அல்லது உலகளாவிய உணர்வு இருக்கிறது. உண்மையில், மணத்துறவு

என்பது நோய், இயற்கை குடும்பக் கட்டுப்பாடு, உடல்சார் பிரிதல், அறுவை சிகிச்சை, அல்லது திருமணத்தின் பேற்றினை கட்டியெழுப்பும் மற்ற சட்டமுறை காரணங்களைத் தவிர, திருமணமான மக்களுக்கு உலகளாவிய விதத்தில் பொருந்தாது. எனினும் திருமணத்தில் மணத்துறவு அனுபவங்கள் கற்பு என்ற புண்ணியத்தில் வளர நமக்கு உதவலாம் என்றாலும், அத்தகைய விலகியிருத்தல் கற்புக்கு இன்றியமையாதக் கூறன்று. உண்மையில், கற்பின் பொருளின் ஆழம் பாவம்நிறை பாலியல் நடத்தையை மறுக்கிறதைத் தாண்டிச் சென்றாலும், கற்பின் ஒரு பகுதியாக இருக்கிற அதற்கு எல்லா சீடர்களும் அழைக்கப்படுகின்றனர். கற்பு என்பது பாவத்தில் இருந்து விலகியிருக்க அவசியமானத் தற்கட்டுப்பாட்டைக் குறிக்கவில்லை என்றாலும், அதைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை விட மேலானதை உள்ளடக்கியுள்ளது.

கற்பு என்பது நாம் பாலியல்பு கொண்டவர்கள் என்ற ஒப்புதல் மற்றும் கண்டுணர்தலில் தொடங்குகிறது. மற்ற மக்களுடனான பாலியல்பு சாராத உறவுநிலைகளிலும், ஆண் மற்றும் பெண் என்ற விதத்தில் தொடர்பு கொள்கிறோம். இந்த சூழமைவில், மற்றவர்களுடனான நமது உறவில் நமது உடல்களை நாம் பயன்படுத்துகின்ற விதமும், நாம் அவ்வாறு செய்கிறதன் நோக்கமும், நமது பாலியல்பை தூயதாக அல்லது தீயதாகப் பயன்படுத்துவதாக ஆக்குகிறது. ஆகவே அந்த நபரின் மனம் மற்றும் இதயத்தின் நோக்கம், நடைபெறும் செயலோடு இணைந்து, மைய அக்கறையாக இருக்கிறது. தெளிவாக, பாவம்நிறை உடல்சார் பாலியல் செயல்களில் ஈடுபடாதது ஒரு நபரின் கற்பை நிலைநாட்டாது, ஏனெனில் பயம் மற்றும் வெட்கத்தால் உடல் செய்யாதவை மனதின் நோக்கங்களாக இருக்கலாம். நமது உடல்கள் தொடர்பாக நமது மனங்களை சரியாக ஒழுங்குபடுத்தவும் பயன்படுத்தவும் நாம் பயிற்சி செய்கின்ற பொறுப்புநிலை பற்றி பேசுகிறது.

24. தாங்கள் விரும்புகின்ற விதத்திலான உடையுடன் தங்களை வெளிக்காட்டும் உரிமைக்காக இன்று போராடுகின்ற பல மக்களுக்கு முரணாக, கற்பு என்பது புறநிலை வெளிக்காட்டலைக் கொண்டுள்ளது என்று கற்புக்கான அறிவுரை நமக்கு கூறுகிறது. புறநிலை வெளிக்காட்டல் என்பது நமது உடல்களை நாம் உடுத்துகின்ற விதமாக இருக்கிறது. உடல் சார்ந்த தன்-வெளிக்காட்டலில் தன்னடக்கத்திற்கும் நற்பாங்கிற்கும் கற்பு அழைப்பு விடுக்கிறது.

*கதிம 2521*: ‘‘தூய்மைக்கு மிதநிலையின் ஒருங்கிணைந்தப் பகுதியான தன்னடக்கம் தேவை. தன்னடக்கம் மனிதரின் நெருங்கிய மையத்தைப் பாதுகாக்கிறது. மறைந்திருக்க வேண்டியதை வெளிக்காட்ட மறுத்தல் என்பதே இதன் பொருள். இது கற்பை ஒழுங்குபடுத்தி, அதன் உணர்வுக்கு சாட்சியம் பகர்கிறது. ஒருவர் மற்றவர்களை எப்படி பார்க்க வேண்டும், அவர்கள் மாண்புக்கும் ஒத்துணர்வுக்கும் இணக்கமாக எப்படி நடக்க வேண்டும் என்று வழிகாட்டுகிறது.’’

*கதிம 2522*: ‘‘தன்னடக்கம் நபர்களின் மறைபொருளையும் அவர்களின் அன்பையும் பாதுகாக்கிறது… தன்னடக்கம் என்றால் நற்பாங்கு. இது ஒருவரின் உடைத் தெரிவைத் தூண்டுகிறது. நலமற்ற ஆர்வப்போக்கில் உள்ள ஆபத்தைக் கண்டு பாதுகாக்கிறது அல்லது அமைதிப்படுத்துகிறது. இது கவனத்துடன் இருக்கிறது.’’

25. மக்கள் ஊடகத்தின் தன்-வெளிக்காட்டலைப் பாதுகாக்கும் நற்பண்பை இழத்தல் அதிகரித்து வருகிறது என்பதை மனதில் கொள்வது தேவையாகிறது. லாபத்துக்காக உடல் இச்சையை விற்கின்ற சமூக மெய்மையை அது ஊட்டுகிறது.

*கதிம 2523*: “உணர்வுகளிலும் உடலிலும் ஒரு தன்னடக்கம் இருக்கிறது. சில விளம்பரங்கள் மனித உடலைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிராக, அல்லது அந்தரங்க விடயங்களை வெளிக்காட்டும் அளவுக்குச் செல்லும் ஊடகங்களுக்கு எதிராக இது போராடுகிறது. தன்னடக்கமானது பாங்கிய கவர்ச்சிகளையும் நடப்புக் கருத்தியல்களின் அழுத்தங்களையும் தடுக்கச் சாத்தியமுள்ள வாழ்க்கை முறையைத் தூண்டுகிறது.”

26. உடலிச்சை உடனான தொடர் போராட்டம் என்பது வாழ்வின் உண்மையாக இருக்கிறது. அத்தகைய உடலிச்சை பற்றி வெட்கத்தை உணர்வது அடிப்படை அறநெறி நம்மை அனுமதிக்கிறதைத் தாண்டிச் செல்வதைத் தடுப்பதற்கு தேவையாகிறது. எப்படி வெட்கத்தை உணர்வது என்று மறக்கின்றச் சமூகம் இறுதியாக கருத்து சுதந்திரம் என்ற பெயரில் பாவம் நிறைந்த பாலியல் பயன்பாட்டை பொது வெளிக்காட்டலில் பொறுத்துக்கொள்கிறது, மேலும் இறுதியாக இந்த நிகழ்வு சாதாரணமானதாக மாறிவிடுகிறது.

27. **கீழ்ப்படிதல்** என்ற நற்செய்தி அறிவுரை, மற்றவர்கள் மீது அதிகாரம் செலுத்துவதைக் கைவிட்டு, கடவுள் மற்றும் அடுத்துள்ளவருடனான உறவில் தாழ்ச்சி நிலையைத் தழுவுமாறு கோருகிறது. கீழ்ப்படிதலின் பாதையைத் தேர்ந்தெடுத்தலில், கிறிஸ்துவைப் போல் மாறுவதை ஒருவர் உள்நோக்கத்துடன் தேர்ந்தெடுக்கிறார், இறைத்தன்மை கொண்டவரும் அதனால் தந்தைக்கு நிகரானவருமான அவர், ஆயினும் அடிப்படையில் மற்றவர்களை மையப்படுத்தினார், எப்பொழுதும் தன்னுடையதை அன்றி தந்தையின் விருப்பத்தை நாடினார்.

28. கடவுளுக்குக் கீழ்ப்படிதல் தெளிவாக கீழ்ப்படிதலின் மிக முக்கிய வடிவமாக இருக்கின்ற வேளையில், மனிதகுலத்துடனான நமது ஒன்றிப்புக்கு உறுதியான மனித முகத்தை நோக்கி கடவுளுக்கானக் கீழ்ப்படிதல் வெளிப்படுத்தப்படுவது அவசியமாகிறது. ஆகவே, நமது ஆன்மிக ஒன்றிப்பின் சூழமைவில், கடவுளுக்குக் கீழ்ப்படிதல் என்பது தனிப்பட்ட ஒன்றாக இருக்க முடியாது, சமூகப் பரிமாணத்திற்குள்ளும் இருக்க வேண்டும். மற்ற வார்த்தைகளில், கீழ்ப்படிதலின் செங்குத்து அம்சம் அதன் கிடைமட்ட அம்சத்தைப் புறந்தள்ளுவதில் இருக்க முடியாது, ஏனெனில் கடவுள் தமது ஆன்மிக அதிகாரத்தை நம்மீது செலுத்த மனித முகவர்களைத் தேர்ந்தெடுக்கிறார், அவர்கள் அவரது தூய திருச்சபை மற்றும் நமது ஆன்மிகக் குழுமங்களின் காப்பாளர்களாக இருக்கின்றனர். இதைப் பற்றிச் சொல்ல அதிகம் இருக்கிறது, ஆனால் மற்றொரு வாய்ப்பு கிடைத்தால் விவாதிக்கும் தனிப்பட்ட விடயமாக விடப்படுகிறது.

29. புனித பிரான்சிஸ் தெ சேல்ஸ் இரண்டு வகை கீழ்ப்படிதல் குறித்து பேசுகிறார், அதாவது, *அவசியமான* கீழ்ப்படிதல் மற்றும் *தன்னார்வ* கீழ்ப்படிதல்.

அவசியமான கீழ்ப்படிதல் என்பது நமது வாழ்வில் வெளிப்படையாக உள்ள அதிகாரிகளுக்கு உரியது. அவர் கூறுகிறார் ஆன்மிக விடயங்களில் திருச்சபை அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்; குடிமை விடயங்களில் அரசர்களுக்கும் நீதிபதிகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும். நமது காலத்தில், அதிகாரம் பெரிதும் சட்டத்தில் அல்லது திருச்சபை படிப்பினைகளில் இருக்கிறது. நீதியான எல்லா சட்டங்களுக்கும் நடைமுறையில் கீழ்ப்படிவது *அவசியமான* கீழ்ப்படிதல் ஆகும். கடவுளின் விருப்பத்தைக் கண்டறிய நாடுகின்ற ஓர் இதயமானது, நல்ல மனச்சான்றை உருவாக்கும் முயற்சியில் புனித மறைநூல், புனித மரபு, மற்றும் திருச்சபையின் ஆசிரியப் படிப்பினைகளைப் பார்க்க வேண்டும்.

தன்னார்வ கீழ்ப்படிதல் என்பது நாம் கீழ்ப்படிய கடமை இல்லாத மற்றவருக்கு கீழ்ப்படிவதை சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கிறதில் செயலாக்கம் பெறுகிறது. இது, சொல்லத் தேவையில்லை, மனிதரில் தாழ்ச்சியின் ஆழ்ந்த உணர்வுக்குத் தேவையான உயர் வடிவக் கீழ்ப்படிதலாகும், இது கடமையினால் அன்றி, ஆழ்ந்த அன்பு மற்றும் நம்பிக்கையால் கீழ்ப்படியச் செய்கிறது. நாம் செய்ய வேண்டியது என்பதால் நாம் கீழ்ப்படிவதில்லை அல்லது அந்த கீழ்ப்படிதலால் எதையும் பெறுவதற்கும் அன்று; நாம் அன்பு செய்வதால் நாம் கீழ்ப்படிகிறோம், மேலும் அன்பு எப்பொழுதும் நம்புகிறது (1கொரி 13:7).

30. தற்போது நாம் பகிரப்பட்ட எல்லாவற்றையும் சேர்த்துப் பார்ப்போம். சீடராக இருத்தல் என்பது உடனடியான உருமாற்றத்தால் நடைபெறுவதில்லை. இது திடீரென நிகழாத ஒரு செயல்மை, ஒரு படிநிலைமாற்றம். இது இயேசுவைப் பின்பற்றுவதில், விசுவாசத்தில் முதிர்ந்த உடன் நம்பிக்கையாளர்களுடனான ஒன்றிப்பில், பல ஆண்டுகளாகப் பயிற்சி செய்யப்படும் சீடத்துவத்தின் விளைவாக இருக்கிறது. சீடத்துவத்தின் இறுதி இலக்கு, மற்றும் இதன் மிகக் காணத்தகு செயல்வடிவமானது, எளிமை, கற்பு, மற்றும் கீழ்ப்படிதல் என்ற நற்செய்தி அறிவுரைகளைத் தழுவுவதில் காணப்படுகிறது.